# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1772/33 - 2012 අගෝස්තු 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.23

*1772/33 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர் இல. : கம்/பி.செ/2/2/1/120.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், யக்கல கிராமத்திலுள்ள 0.3700 ஹெக்டயார் பரப்பளவுடைய கம்பஹா நில அளவையாளரால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப வரைபட மு. பி. கம் 3849 ஆம் இலக்க காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர் : தபுவேவத்த ; விபரம் : வீட்டுத் தோட்டம், 25 - 30 வருட வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கை, இரண்டு நிரந்தரக் கட்டிடங்கள், கிணறு, பௌத்த வழிபாட்டு இடம் என்பன காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : திரு. டீ. எம். பீரிஸ், தபுவே, வலவ்வ, யக்கல ; விஸ்தீரணம் : 0.3700 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கம்பஹா பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சி. பி. டபிள்யூ. குணதிலக,
பிரதேச செயலாளர்,
கம்பஹா.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கம்பஹா,
2012.08.22.

09- 210

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.